**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 232/2022 |
| Deposition of Witness | : | PW–4 |
| Name | : | பிரகாஷ் |
| Father Name | : | சுப்பிரமணி |
| Village | : | சேலம் |
| Taluk | : | சேலம் |
| Age | : | 38 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் உள்ள கலைஞர் நுற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2022 ம் தேதி மாலை 5.40 மணிக்கு காங்கேயம் அரசு மருந்துவமனையில் அலுவல் மருத்துவராக பணியில் இருந்த போது திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் பாப்பம்பாளையம் நாச்சி மகன் சுப்பன் என்பவர் என்னிடம் ஆஜராகி 12.05.2025 தேதி மதியம் 3.30 மணியளவில் வெள்ளகோவில் வெட்டாரவலசில் உள்ள பொன்னுச்சாமி எனபவரது தோப்பில் வேலை செய்யும் போது வெள்ளாடு வெள்ளாமையை மேய்ந்தபோது தன்னை தெரிந்த நபர் கல்லை கொண்டு வீசி காயம் ஏற்பட்டுவிட்டதாக கூறினார் அவரை சிகிச்சைக்காக பரிசோதித்து பார்த்தபோது அவர் சுயநினைவுடன் தெளிவாக இருந்தார். அவரது மூக்கில் 3x0.5x2 செ,மீ அளவுள்ள வெட்டுகாயம் காணப்பட்டது. மேலும் மூக்கில் இருந்த காயத்தில் இரத்தம் வலிந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துமனைக்கு பரிந்துரை செய்தேன். அந்த பரிந்துரையின் பேரில் அவர் மேல் சிகிச்சைக்கு திருப்பூர் அரசு மருத்துவமனையில் 12.05.2025 தேதி உள் நோயாளியாக சிசிச்சைக்கு சேர்ந்து பின்னர் 18.05.2025 ம் தேதி சிகிச்சை முடித்து வெளியேற்றப்பட்டார். பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறிந்து திருப்பூர் அரசு மருத்துமனையில் இருந்து பெறப்பட்ட கருத்துரைப்படி சாட்சிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று

வழங்கினேன். **தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு/காயச்சான்று நான் வழங்கியது அது அ.சா.ஆ.4 ஆக குறியூடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

என்னிடம் சுப்பன் என்பவர் சிகிச்சைக்கு வருமுன் வேறு மருத்துவமனையில் எதாவது சிகிச்சை எடுத்து வந்தாரா என்றால் இல்லை. காயத்துடன் என்னிடம் வந்தார். அவரை சிகிச்சைக்கு நாச்சி என்கிற நபர் மருத்துவமனைக்கு கூட்டி வந்தார் என்றால் சரிதான். தன்னை யார் தாக்கினார்கள் என்ற விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் காயச்சான்றை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த ஆவணங்களை என்னிடம் போலீசார் காண்பித்தார்கள். அந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த காயங்கள் எல்லாம் ஒரு நபர் நிலை தடுமாறி கல் மீது விழுந்தாலோ கூர்மையான பொருளின் மீது விழுந்தாலோ ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.06 18:44:01 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்